ஆட்சியில் நாங்குநேரி தொகுதி, டாக்டர் கலைஞரின் தொகுதி என்று சொல்லுகின்ற அளவிற்கு நீங்கள் அதிலே வழிவகை செய்துகொடுக்க வேண்டும். தென்னகம் வாழும், தெற்கேயிருந்து தோன்றிய பெருந்தலைவர் காமராஜருடைய தொண்டன் என்ற முறையிலே உங்களை நான் மிகவும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். எங்களையும் கவனியுங்கள், நாங்கள் எப்பொழுதும் உங்களைக் கவனித்துக் கொண்டிருப்போம் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகின்றேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

2. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) சிறுபான்மையினரான கிறிஸ்துவர் மற்றும் முஸ்லிம்களுக்கான தனி இடஒதுக்கீடு குறித்த முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றியும், பாராட்டும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, சிறுபான்மையினர் நலன் கருதி, நல்லறிவிப்புகளை அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு சட்டமன்றப் பேரவை சார்பாகவும், பேரவைத் தலைவர் என்ற முறையிலும் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

4. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

(ஆ) கோரிக்கை எண் 11—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(இ) கோரிக்கை எண் 10—வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.*